# மயிலாடுதுறையில் ஆயிரம் கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி: அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!









தி.மு.க.விற்காக உழைத்த, மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த மூத்த கழக முன்னோடிகள் ஆயிரம் பேருக்கு தலா ரூ.10 ஆயிரத்தை பொற்கிழியாக கழக இளைஞர் அணிச் செயலாளர் – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். பெரியார், அண்ணாவிடம் அரசியல் பயின்று கலைஞர் அவர்களுடன் களம் பல கண்டு முதலமைச்சர் அவர்களுக்கு பக்கபலமாக நிற்கும் கழக மூத்த முன்னோடிகளின் வாழ்த்துகளை பெற்று மகிழ்வதாக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார். இந்நிகழ்வின் போது அமைச்சர்கள், கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### பூண்டி கே.கலைவாணன் வரவேற்புரை!

## குடவாசல் தெற்கு ஒன்றிய செயலாளர் பா.பிரபாகரன் இல்ல திருமண விழா!

### அர.சக்கரபாணி - டி.ஆர்.பி.ராஜா - அன்பில் மகேஷ் பொய்யாமொழி பங்கேற்பு!

திருவாரூர், ஜூன் 23 -

திருவாரூர் மாவட்டம் குடவாசல் தெற்கு ஒன்றிய செயலாளர் பா.பிரபாகரன் இல்லதிருமணவிழா நாளது 29.06.2023 அன்று நடைபெற இருக்கிறது. மாவட்ட செயலாளர் பூண்டி கலைவாணன், அமைச்சர் பெருமக்கள் அர.சக்கரபாணி, டி.ஆர்.பி.ராஜா, அன்பில் மகேஷ் பொய்யாமொழி உள்ளிட்டோர் பங்கேற்றுச் சிறப்பிக்கின்றனர்.

குடவாசல் தெற்கு ஒன்றிய செயலாளர் பா.பிரபாகரன் - விஜயலட்சுமி இணையரின் புதல்வர் பொறியாளர்.மணிமாறன், எம்.எஸ்.ஏ. கண்ணன் - வசந்தி இணையரின் புதல்வி பொறியாளர் ஸ்வேதா ஆகியோரின் திருமண விழா, கழக தலைவர் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் , இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் நல்வாழ்த்துக்களுடன் 29.06.2023 அன்று காலை கும்பகோணம் மாநகராட்சி திருமண அரங்கில் நடைபெற இருக்கிறது.

இந்த திருமண வைபோகத்தில் மாவட்டச் செயலாளர் பூண்டி கலைவாணன் வரவேற்புரை நல்கிட, சிறப்பு அழைப்பாளர்களாக உணவு மற்றும் உணவுப்பொருள்கள் வழங்குதல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி ,தொழில்முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா , பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி , சு.கல்யாணசுந்தரம் எம்.பி., எஸ்.எஸ்.பழனிமாணிக்கம் எம்.பி., செ. இராமலிங்கம் எம்.பி., தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், தலைமை கொறடா கோவி.செழியன், சட்டமன்ற உறுப்பினர் சாக்கோட்டை அன்பழகன் ,

மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் நா. இளையராஜா, திட்டக்குழு உறுப்பினர் இரா.சங்கர், முன்னாள் அமைச்சர் தாட்கோ தலைவர் உ.மதிவாணன்,தலைமை உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் கல்யாணம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் க.அன்பழகன், மீன் வளர்ச்சி கழக தலைவர் கௌதமன், மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி. பாலு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்று வாழ்த்துரை வழங்குகின்றனர்.

குடவாசல் பேரூர் செயலாளர் ஏ.கே.டி.சேரன் நன்றி கூறுகிறார்.





மயிலாடுதுறை மாவட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகள் குறித்து அனைத்துத் துறை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (21.06.2023) நடைபெற்றது. இக்கூட்டத்தில் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.பி.மகாபாரதி, மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் .செ.இராமலிங்கம் , பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் .நிவேதா எம்.முருகன் , சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் .எம்.பன்னீர்செல்வம் , மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் .எஸ்.ராஜகுமார் , மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என்.எஸ். நிஷா மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### பஞ்சாப்: பக்ரா கால்வாயில் விழுந்த மாணவியின் உயிரைக் காப்பாற்றிய

## இராணுவ வீரர் நவநீதகிருஷ்ணனுக்கு பாராட்டு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் ட்விட்டரில் பதிவு!

சென்னை, ஜூன் 23 -

பஞ்சாபில் பக்ரா கால்வாயில் விழுந்த மாணவியின் உயிரைக் காப்பாற்றிய இராணுவ வீரர் நவநீதகிருஷ்ணனுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பாராட்டு தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பஞ்சாப் மாநிலம் பாட்டியாலாவில் பக்ரா கால்வாயில் தவறுதலாக விழுந்த மாணவியின் உயிரை துணிச்சலாகக் காப்பாற்றிய இராணுவ வீரர் நவநீதகிருஷ்ணனைப் பாராட்டி வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு :

**இன்னல் நேரும் தருணத்தில் தன்னுயிர் பாராமல் பஞ்சாப் மாணவியின் உயிரைக் காப்பாற்றிய இராணுவ வீரர் நவநீத கிருஷ்ணனை வாழ்த்துகிறேன்! பாராட்டுகிறேன்!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலை தளத்தில் பதிவிட்டுள்ளார்.

### திருவான்மியூர் – தரமணியில்

## துணை மின் நிலையங்களில் கட்டுமானப் பணிகள்!

### அமைச்சர் தங்கம் தென்னரசு ஆய்வு!

சென்னை, ஜூன் 23 -

சென்னை திருவான்மியூர் மற்றும் தரமணியில் புதிதாக அமையவுள்ள வலிம காப்பு துணை மின் நிலையங்களின் கட்டுமானப் பணிகளை நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆய்வு செய்தார்.

சென்னை திருவான்மியூரில் நேற்று முன்தினம் தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகத்தின் சார்பில் ரூ.92.55 கோடி ரூபாய் மதிப்பீட்டில், தமிழகத்திலேயே முதன்முறை யாக, முழுவதுமாகவே “எண்முறை தொழில் நுட்பத்தில்” (Digital Technology) அமைக்கப்பட்டு வரும் 230/33 கிலோ வோல்ட் எண்முறை வளிமகாப்பு {Digital Gas Insulated Substation) துணை மின் நிலையத்தின் கட்டுமானப் பணிகளை நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆய்வு செய்தார். ஆய்வின்போது தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக தலைவர் ராஜேஷ் லக்கானி, மேலாண்மை இயக்குநர் (மின் தொடரமைப்பு கழகம்) இரா.மணிவண்ணன், இயக்குநர் (திட்டம்) எம்.இராமச்சந்திரன் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

பின்னர், அமைச்சர் அவர்கள் தரமணியில் 708 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 400/230/110/33 கிவோ வளிமகாப்பு (Gas Insulated Substation) துணைமின் நிலையமாக தரம் உயர்த்தி மேம்படுத்த நடந்து வரும் கட்டுமானப் பணிகளையும் ஆய்வு செய்தார். பின்னர், தற்போது இயங்கி வரும் 230/110/33 கிவோ துணைமின் நிலையத்தினை பார்வையிட்டு செயல்பாடு குறித்து கேட்டறிந்தார்.





தி.மு.கழகத்தின் மூத்த முன்னோடி பல்வேறு நிலைகளில் கழகப் பணியாற்றி பெரியார் விருது பெற்றவரான சமீபத்தில் மறைந்த மிசா பி.மதிவாணன் அவர்களின் செம்பனார்கோவில் இல்லத்துக்குச் சென்று அவருடைய திருவுருவப்படத்திற்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செய்தார்.